Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, SEPTEMBER 29, 2023

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 29, 2023 | ஒளி: 09 கதிர்: 095 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

இலங்கையின் கல்வித்துறையில் நீண்டகால பிரச்சினைக்கு வாய்ப்பு

# நிபுணர்கள் எச்சரிக்கை

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பிற்போடப்படுவதால், தேசிய மற்றும் சர்வதேச பட்டதாரி பாடத்திட்டங்களுக்காக இணைத்துக்கொள்வதற்கான வயது எல்லை அப்பால் சென்றுவிட்டால், இலங்கை கல்வித்துறையில் நீண்டகால பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகுமென கல்வி நிபுணர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பரீட்சையை பிற்போடுவது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் மற்றும் அது தொடர்பில் மேலும் ஆராயப்படவேண்டும் என்பதே தங்களுடைய நிலைப்பாடாகும் என்றும் கல்வி நிபுணர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

கடந்த காலங்களில் கொரோனா பிரச்சினை மற்றும் பொருளாதார பிரச்சினை ஆகியவற்றின் காரணமாக பரீட்சைகள் பிற்போடப்பட்டமை மற்றும் பாடசாலை கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்திருந்தமை தொடர்பில் எடுத்துரைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## கொட்டாஞ்சேனை தங்கப் பெண் சிக்கினார்

இந்தியாவில் இருந்து 1.2 மில்லியன் ரூபாய் பெறுமதியான நகைகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த இலங்கை வர்த்தகப் பெண் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறும் போது வியாழக்கிழமை (28) அதிகாலை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

பாலியல் குற்றச்சாட்டு வழக்கில்

## குணதிலக்க குற்றமற்றவர்

### ஆஸி நீதிமன்றம் தீர்ப்பு

இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க குற்றமற்றவர் என்று அவுஸ்திரேலியாவின் டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்ற மாவட்ட நீதிமன்ற நீதிபதி சாரா ஹகெட், வியாழக்கிழமை (28) தீர்ப்பளித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தில் விளையாடுவதற்காக சென்ற தனுஷ்க, பெண்ணொருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக நான்கு



குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

துப்பாக்கி அனுமதி பத்திரங்களை

## மூன்று மாதங்களுக்குள் புதுப்பிக்க வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சு விசேட அறிவித்தல்

துப்பாக்கிகளை வைத்திருக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டுக்கான துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களை 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை புதுப்பிக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான துப்பாக்கிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை



புதுப்பித்தல் தொடர்பான விசேட அறிவிப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## அடக்குமுறை குறித்து கனேடிய தூதுவர் எரிக்கிடம் எடுத்துரைப்பு

ஆ.ரமேஸ்

மலையக மக்கள், மற்றும் நாட்டில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும்அடக்குமுறை சட்டத்தின் ஊடாக நாட்டு மக்கள் மீது பல்வேறு துன்பங்களை திணிப்பது,

தொடர்ச்சி P2

சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரங்களை

## தூங்கா நகரங்களாக மாற்ற வேண்டும்

நாட்டில் சுற்றுலா ஈர்பப்பு மிக்க நகரங்களை தூங்கா நகரங்களாக மாற்றியமைக்க வேண்டும் என்றும் இவ்வருட இறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலாப் பிரயாணிகளை நாட்டுக்கு வரவழைப்பதற்கு அவசியமான ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாக சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## இன ஐக்கிய மீலாத் விழா...

காத்தான்குடியில் சர்வமத தலைவர்கள் கலந்து கொண்ட இன ஐக்கிய மீலாத் விழா, காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலீம்கள் அமைப்பின் ஏற்பாட்டில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் வியாழக்கிழமை (28) நடைபெற்றது.

எம்.எஸ்.எம்.நூர்தீன்

களஞ்சியசாலைகளுக்கு

## நாளை முதல் பூட்டு

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளை இந்த மாத இறுதியில் மூடுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொடவுக்கு விடுத்த பணிப்புரைக்கு அமைய நாளை (30) முதல் களஞ்சியசாலைகளை மூடுவதற்கு சபை தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



## கடல் அட்டைகளை பிடித்த மூவர் கைது



பு.கஜிந்தன்

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் இரவு நேரத்தில் சட்டவிரோதமாக அட்டைகளை பிடித்த மூவர் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் மன்னாரை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

பு.கஜிந்தன்

வீட்டில் இருந்து முதியவர் ஒருவர் கடந்த 24ஆம் திகதி வெளியே சென்ற நிலையில், அவர் காணாமல் போனதாக அவரது உறவினர்களால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த முதியவர் உடுவில் பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து சடலமாக வியாழக்கிழமை (28)மீட்கப்பட்டுள்ளார்.


தொடர்ச்சி P2

## சிறுமியின் கை: கொழும்பில் பரிசோதனைக்கு உத்தரவு

எம்.றொசாந்த், பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் அனுமதிக்கப்பட்ட பின்னர், துண்டிக்கப்பட்ட 8 சிறுமியின் கையை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுப்புமாறு யாழ்ப்பாண மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி அ.அ.ஆனந்தராஜா கட்டளை பிறப்பித்தார்.

தொடர்ச்சி P2



## 4 வெவ்வேறு ரயில்களில் மோதி 2 நபர்களும் 5 யானைகளும் பலி

நாட்டின் நான்கு வெவ்வேறு பகுதிகளில் ரயில்களுடன் மோதுண்டு ஏற்பட்ட 4 விபத்துக்களில் இரு நபர்கள் உயிரிழந்துள்ளதுடன், 5 யானைகள் பலியாகியுள்ளன.

மீட்டியாகொடயில் நபரொருவரும் ஆராச்சிகட்டுவயில் மற்றொரு நபரும் கல்கமுவ - அம்பன்பொல பகுதிகளுக்கு இடையே 4 யானைகளும் ஹபரன பலுகஸ்வெவ பகுதியில் குட்டி யானை ஒன்றும் உயிரிழந்துள்ளன.

தொடர்ச்சி P2

## மூளைசாலிகளின் வெளியேற்றம்: ஒக். 6இல் ஒத்தவைப்பு விவாதம்

பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் வல்லுநர்கள் (மூளைசாலிகள்) நாட்டை விட்டு வெளியேறும் சமீபத்திய போக்கு குறித்து எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் திகதி ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வுகளை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் போக்கு தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# நிபுணர்கள் எச்சரிக்கை

2023 உயர்தரப் பரீட்சை 2024 ஜனவரி வரையிலும் பிற்போடப்பட்டால், அந்த வருடத்தில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2024 மே மற்றும் மே மாதம் வரையிலும் ஒத்திவைக்கப்படவேண்டும்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவது 2024 ஜூலை மாதம் வரையிலும் தாமதமாகும். அப்போது 2024 உயர்தர பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பத்தாரிகள், இந்தத் தடவையைப் போல மேலதிக காலத்தை வழங்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் கல்வி நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமாயின் 2024 உயர்தரப் பரீட்சை மீண்டும் 2024 டிசெம்பர் அல்லது 2025 ஜனவரி மாதம் வரையிலும் பிற்போடப்படவேண்டும். இலங்கையின் கல்வியில் உள்ள பின்தங்கிய நிலையை சரிசெய்வது மேலும் தாமதமாகும் என்றும் அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

பரீட்சைகள் ஒத்திவைப்பு, பாடசாலை தவணைகள் தாமதமாகுதல், மாணவர்களை பாடசாலைக்கு சேர்த்தல் 11, 12ம் வகுப்பு மாணவர்கள் கூடுதலாக தங்க வேண்டிய நிலை, வகுப்பறைகளில் இடப் பிரச்னையும் ஏற்படுகிறது.

உயர்தரத்துக்கான நுழைவுத் தாமதம், வெளிநாட்டுப் பல்கலைக்கழக அனுமதி தாமதம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் புலமைப்பரிசில் இழப்பு, அரச துறை ஆட்சேர்ப்பு தாமதம் போன்ற நீண்டகால விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும் என கல்வி நிபுணர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாணவர்கள், 18 வயதிலேயே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும், ஆனால் பரீட்சைகள் பிற்போடப்பட்டதன் காரணமாக அந்த வயதும் மீறப்பட்டுள்ளதாக கல்வி நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## கொட்டாஞ்சேனை தங்கப் பெண் சிக்கினார்

கொழும்பு, கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் வசிக்கும் 54 வயதுடைய இந்த பெண் அடிக்கடி விமானங்களில் பயணித்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

வியாழக்கிழமை (28) அதிகாலை 03:00 மணியளவில், இந்தியாவின் சென்னையில் இருந்து இண்டிகோ எயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார், அங்கு அனைத்து சோதனைகளையும் முடித்துவிட்டு விமான நிலையத்திலிருந்து வெளியேறும் போது கைது செய்யப்பட்டார்.

587 கிராம் 316 மில்லிகிராம் நிறையுள்ள இந்த நகைகள் அவர் கொண்டு வந்த சூட்கேஸில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

கைப்பற்றப்பட்ட நகைகள் மற்றும் அவற்றை சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்த வர்த்தகப் பெண்ணிடம் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## குணதிலக்க குற்றமற்றவர்

ஒபரா ஹவுஸுக்கு அருகிலுள்ள ஒரு களியாட்ட விடுதியில் இருவரும் சந்தித்தமை மற்றும் அந்த பெண்ணின் வீட்டுக்கு சென்றமை குறித்து நீதிமன்றம் விசாரணை நடத்தியிருந்தது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, தனுஷ்க குணதிலக்க மீதான நான்கில் 3 குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டதுடன், குணதிலக்க மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கின் வழக்கு விசாரணைகள் நிறைவடைந்து வியாழக்கிழமை (28) தீர்ப்பளிக்கப்படும் என, 21ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

குணதிலக்க குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளித்த நீதிபதி சாரா ஹகெட், குற்றம் சாட்டப்பட்டவர் ஆணுறையை அகற்ற வாய்ப்பில்லை என்பதை ஆதாரங்கள் நிறுவுகின்றன என்றும் ஏனென்றால் அந்த



உடலுறவு தொடர்ச்சியாக இருந்தது என்றும் தீர்ப்பில் அறிவித்தார்.

தீர்ப்பு “எல்லாவற்றையும் கூறுகிறது” என்று நீதிமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களிடம் தெரிவித்த குணதிலக்க, தனக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன், மீண்டும் கிரிக்கெட் விளையாட ஆர்வமாக இருப்பதாக தெரிவித்தார்.

## அடக்குமுறை குறித்து கனேடிய தூதுவர் எரிக்கிடம் எடுத்துரைப்பு

ஊடக அடக்குமுறை, தொழிற்சங்க அடக்குமுறை நிலவுவதாகவும் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ்க்கு எடுத்துரைக்கப்பட்டதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ்க்கும் மலையக மக்கள் முன்னணிக்கும் இடையிலான சந்திப்பு நுவரெலியா கிறாண்ட் ஹோட்டலில் வியாழக்கிழமை (28) காலை இடம்பெற்றது.

மரியாதை நிமிர்த்தம் இடம்பெற்ற இந்த சந்திப்பில் வேலுசாமி ராதாகிருஸ்ணன் எம்.பி, முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணி பிரதி தலைவருமான ஆர். ராஜாராம்,

மலையக தொழிலாளர் முன்னணி பதில் பொதுச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டிருந்தனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது மலையக மக்கள், மற்றும் நாட்டில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ்க்கு எடுத்துரைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த சந்திப்பு மரியாதை நிமிர்த்தம் இடம்பெற்றதாக தெரிவித்த அவர், இதில் குறிப்பாக மலையக சமுதாயத்தின் இன்றைய நிலை குறித்தும் நாட்டில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் தூதுவருக்கு மலையக மக்கள் முன்னணி பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த சந்திப்பில் மலையக கல்வி வளர்ச்சி தொடர்பாகவும் மலையக அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடியதாகவும் இன்று நாட்டில் எதற்கும் ஏற்புடையாத வகையில் கொண்டுவரப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டம் இந்நாட்டிற்கு பொருத்தமில்லை எனவும் இது அடக்கு முறை சட்டம் எனவும் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த அடக்குமுறை சட்டத்தின் ஊடாக நாட்டு மக்கள் மீது பல்வேறு துன்பங்களை திணிப்பது, ஊடக அடக்குமுறை, தொழிற்சங்க அடக்குமுறை நிலவுவதாகவும் தூதுவர் கவனத்திற்கு பிரஸ்தாபிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

மற்றும் ஜனாதிபதிக்கு பல்வேறு அதிகாரங்களை கையில் கொடுப்பது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்த அவர், இவ்வாறு தூதுவருக்கு பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களில் சிலவற்றை தூதுவரும் ஏற்றுக்கொண்டதாவும் குறிப்பிட்டார்.

அதற்கான முழுமையான பதிலை தூதுவர் சொல்லாவிட்டாலும் நாட்டில் இவ்வாறு நடக்கின்றது என்பதை தெரிந்து வைத்து கொண்டதுடன், இவ்வாறு நடப்பது சற்று வேதனைக்குறிய விடயம் என தூதுவர் கவலைப்பட்டதாக இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

## தூங்கா நகரங்களாக...

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளதெனவும், அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக டெக்ஸி சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் பதில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டிருந்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தின் ஆரம்ப பகுதியில் 10 இலட்சம் சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என்றும் இவ்வருட இறுதிக்குள் 15 இலட்சம் பேரை வரவழைக்க முடியும் என எதிர்பார்த்திருப்பதாகவும், அதற்காக விசேட ஊக்குவிப்புத் திட்டமொன்றை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

வருடத்தின் இறுதி காலப்பகுதியிலேயே நாட்டுக்கு சுற்றுலாப் பிரயாணிகளில் வருகை அதிகமாக இருக்கும் என்பதால், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெருமளவான சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அதேபோல் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப் பிரயாணிகளை நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்த்திருக்கும் நிலையில், அடுத்த மாதத்தின் இடைப்பகுதியிலிருந்து அவர்களை வரவழைப்பதற்கான ஊக்குவிப்புத் திட்டங்கள் பலவும் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாக எல்ல, நுவரெலியா, காலி மற்றும் கொழும்பு உள்ளிட்ட சுற்றுலாப் பிரயாணிகள் அதிகளவில் நடமாடும் பகுதிகளில் இரவு நேரங்களில் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

நாட்டில் சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரங்களை தூங்கா நகரங்களாக மாற்றியமைக்க வேண்டும் என்றும், சில சட்டத்திட்டங்களை தளர்த்த வேண்டும் என்பதோடு, சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டில் செலவுகளை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்க தவறும் பட்சத்தில் நாட்டிற்கு வருமானம் கிட்டாது என்றும் வலியுறுத்தினார்.

அதேபோல், நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்துள்ளதெனவும், சிலர் செய்யும் தவறான செயற்பாடுகளினால் முழு நாட்டுக்கும் அவப்பெயர் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதனால் சுற்றுலாப் பயணிகளிடத்தில் அதிக தொகையை அறவிடும் உள்நாட்டு வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதோடு, அவர்களை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்கும் வகையில் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இந்நாட்டின் டொலர் வருமானத்தை அதிகரிப்பதற்கு உள்நாட்டு கஞ்சா உற்பத்திக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்திருப்பதாகவும், இரு வாரங்களுக்குள் அதற்கு அமைவான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுமெனவும் தெரிவித்தார்.

## கடல் அட்டைகளை பிடித்த மூவர் கைது

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உடமைகளுடன் மூவரும் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இரவு நேரத்தில் பல படகுகள் சட்டவிரோதமாக அட்டை பிடிப்பதாக கடற்படையினரிடம் அண்மைக்காலமாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயினும், பல படகுகள் தடைசெய்யப்பட்ட அட்டை தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

## சிறுமியின் கை:...

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமி ஒருவரின் இடதுகையின் மணிக்கட்டுக்கு கீழ் அகற்றப்பட்டது.

சிறுமியின் கை அகற்றப்பட்டமைக்கு விடுதியில் கடமையில் இருந்தவர்களின் அலட்சியமும், தவறுமே காரணம் என்று சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில், சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் புதன்கிழமை (27) விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட விசேட உடற்கூற்று நிபுணர் ஒருவர் ஊடாக உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸார் கோரியமைக்கு அமைய நீதிமன்றம் கட்டளையிட்டது.

வழக்கு ஒக்டோபர் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 4 வெவ்வேறு ரயில்களில் மோதி 2 நபர்களும் 5 யானைகளும் பலி

மீட்டியாகொட, ஆராய்ச்சிக்கட்டுவ, கஹாவ, கொடகம ரயில் கடவையில் வியாழக்கிழமை (28) காலை ரயிலுடன், பாரவூர்தி ஒன்று மோதுண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் பாரவூர்தியில் பயணித்த பத்தேகம பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்த பாரவூர்தியின் சாரதி பலபிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், கொழும்பு கோட்டையில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த ரயலுடன், ஆராச்சிக்கட்டுவ ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் ஓட்டோ ஒன்று வியாழக்கிழமை (28) மோதியதில் ஒருவர் ஓட்டோ சாரதி உயிரிழந்தார்.



இதேவேளை, கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த இரவு தபால் ரயிலுடன் கல்கமுவ - அம்பன்பொல பகுதிகளுக்கு இடையில் மோதுண்டு 4 யானைகள் உயிரிழந்துள்ளன.

விபத்தை அடுத்து ரயில் எஞ்சினில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காலையில் சீரமைக்கப்பட்டு ரயில் போக்குவரத்துகள் தடங்கல் இன்றி தொடர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மேலும், கொழும்பு மட்டக்களப்பு ரயில் மார்க்கத்தில் கொழும்பு நோக்கி புதன்கிழமை (27) இரவு பயணித்த மீனகயா கடுகதி ரயில் மோதியதில் குட்டி யானை உயிரிழந்துள்ளதுடன், தாய் யானை ஆபத்தான நிலையில் உள்ளதாக தெரியவருகிறது.


ஹபரன பலுகஸ்வெவ பகுதியில் வைத்து வியாழன் (28) முன்னிரவு 12.30 மணியளவில் ரயிலுடன் யானைகள் இரண்டும் மோதியதிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

## மூன்று மாதங்களுக்குள் புதுப்பிக்க வேண்டும்

பாதுகாப்பு அமைச்சின் wdefence.lk என்ற இணையத்தளத்தில் தகவல் மற்றும் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு பின்னரை துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படாது என்று அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் 22ஆவது சட்டத்தின்படி, செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் இல்லாமல் துப்பாக்கியை வைத்திருப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்று பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டது.

இதற்கிடையில், 2024/2025 ஆம் ஆண்டிற்கான தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின்



பதிவு புதுப்பித்தல் 2023 ஒக்டோபர் 1 முதல் டிசெம்பர் 31 வரை மேற்கொள்ளப்படும் என்றும் காலக்கெடுவிற்குப் பின்னர் செய்யப்படும் எந்தவொரு புதுப்பித்தல்களும் அபராதம் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்தது.

## நாளை முதல் பூட்டு

அரசாங்கத்தால் சிறுபோகத்துக்காக நெல் கொள்வனவுகள் ஆரம்பித்த போது நெல் சந்தைப்படுத்தல் சபையின் 39 களஞ்சியசாலைகள் திறந்து வைக்கப்பட்டன.

நெல் விலை 60 முதல் 70 ரூபாய் வரை குறைந்திருந்த போது கீரி சம்பா 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதுடன், அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக தனியார் துறையினரும் நெல் கொள்வனவு விலையை 110 ரூபாவினால் அதிகரித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் காரணமாக விவசாயிகள் தமது அறுவடைக்கு நல்ல விலையைப் பெற்றுக் கொள்ள முடிந்ததாக அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

விவசாயிகள் நெல்லை சபைக்கு விற்கவில்லை என்றும், அதிக விலைக்கு தனியாருக்கு நெல்லை விற்றதாகவும் கூறிய அமைச்சர், நெல் சந்தைப்படுத்தல் சபையின் கீழ் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யாததால், இம்முறை பருவம் முடியும் தருவாயில் களஞ்சியங்களை திறந்து வைப்பதில் அர்த்தமில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இயக்கக் கட்டணங்கள் அதிகரித்து வருவதாலும், விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லை விற்பனை செய்யாததாலும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு பின்னர் களஞ்சியசாலைகளை மூட நெல் சந்தைப்படுத்தல் சபை தீர்மானித்துள்ளது.

## காணாமல் போனவர்...

உடுவில் மல்வம் பகுதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் செல்வராசா (வயது 71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது குறித்து சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விமானங்கள் பற்றாக்குறையால் விமானங்கள் தாமதம்

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததே இலங்கை விமானங்கள் தொடர்ச்சியாக தாமதமாகி வருவதற்கு முக்கிய காரணம் என விமான சேவையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தினசரி விமான நடவடிக்கைகளுக்கு 24 விமானங்கள் தேவைப்பட்டாலும், தற்போது 20 விமானங்கள் மட்டுமே செயல்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் பேச்சாளர் கூறினார்.

ஆனால் மேலும் இரண்டு A.-330 மற்றும் A.-320 விமானங்கள் நீண்டகால அத்தியாவசிய பராமரிப்புக்காக இயக்கப்படுகின்றன, A.-320 Neo குழு விமானங்கள் பிரான்சில் உள்ள Airbus நிறுவனத்திடம் இருந்து புதிய இயந்திரங்களைப் பெறும் வரை மேலும் இரண்டு விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக இலங்கையின் பொறியியல் பிரிவில் பணிபுரியும் சுமார் 30 பேர் அதிலிருந்து வெளியேறி வெளிநாட்டு விமான நிறுவனங்களுக்குச் சென்றுள்ளதால் எஞ்சியுள்ள ஊழியர்கள் தேவையான பணிகளை மேற்கொள்வார்கள் எனவும் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, வியாழக்கிழமை (28) காலை வரை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து பாகிஸ்தானின் லாகூர், இந்தியாவின் சென்னை மற்றும் பங்களாதேஷின் டாக்காவிற்கு புறப்பட வேண்டிய விமானங்கள் தாமதமாகின.

இந்த விமானங்கள் தாமதமாக வருவதால் தனது பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துவதாகவும், விரைவில் இந்த பயணிகளை அவர்களது இடங்களுக்கு அனுப்ப தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### பிராந்திய சுகாதார பணிமனை கட்டட விவகாரம்

## கடிதத்தை மீளப்பெற்றார் பதில் பணிப்பாளர்

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார பணிமனை கட்டடத்தை மத்திய சுகாதார அமைச்சின் பாவனைக்கு எடுத்துக் கொள்வது தொடர்பில் அவை தலைவர் சி.வி.கே.சிவஞானம் கேள்வி எழுப்பிய நிலையில் ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தை மீளப்பெறுவதாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளரும் மாகாண சுகாதார பதில் பணிப்பாளருமான வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் புதன்கிழமை (27) இடம்பெற்ற கூட்டத்தின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுகாதார விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போது அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், மாகாண அதிகாரத்துக்கு உட்பட்ட கட்டடம் ஒன்றை மத்திய சுகாதார அமைச்சுக்கு வழங்குவது பொருத்தம் அற்றது எனத் தெரிவித்தார்.

இவ்வாறான விடயங்கள் மாகாண அதிகாரங்கள் தொடர்பில் பலவீனத்தன்மையை ஏற்படுத்தும் எனவும் இதை சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என கூறினார்.

இதன் போது பதிலளித்த வடமாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ், தன்னிடம் கோரிக்கை அனுப்பப்பட்டதாகவும் குறித்த கடிதத்திற்கு தான் பதிலளிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அது மட்டும் அல்ல, அது மாகாண அதிகாரங்களை மத்திய வழங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை எனவும் கடந்த காலங்களில் மாகாண பாடசாலைகளை மத்திக்கு வழங்குவது தொடர்பில் நான் செயற்பட்ட விதம் அனைவருக்கும் தெரியும் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த வைத்தியர் சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு அருகில் உள்ள பிராந்திய சுகாதார பணிமனை கட்டடத்தை கேட்டேன்.

ஆனால் இந்த கோரிக்கையினால் பிரச்சனை ஏற்படுமாயின் பிரச்சனைக்கு உள்ளாக விரும்பவில்லை ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தை மீளப் பெறுவதற்கான கடிதத்தை அனுப்புவதாக தெரிவித்தார்.

## இன்று மாலை "இசை அரங்கு"

கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலக்கியக்களம் நிகழ்வில் கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி, கலாநிதி ஜெ.தற்பரன் தலைமையில் "இசை அரங்கு" வெள்ளிக்கிழமை (29) மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இசை முதுகலைமாணி திருமதி சந்திரிகா ரவிகுமாரின் மாணவி செல்வி ஷஷி ஸ்னோவிகா சிவகுமார் இசை அளிக்கையினை நிகழ்த்துவார். குயிலுவக் கலைஞர்களாக வயலின் - திருமதி மதுரா பாலச்சந்திரன், மிருதங்கம் வை.வேனிலான் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

## தீக்குச்சால் குழந்தையின் வாயில் சுட்ட தாய் கைது



தனது மூன்று வயதுக் குழந்தையின் வாயில் தீக்குச்சியை பற்றவைத்து எரித்த தாயை (29 வயது)சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக தியுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழந்தையின் மேல் உதட்டில் தீக்காயங்களின் அடையாளமும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தூசன வார்த்தைகளை கூறியதால், நிறுத்தும்படி பயமுறுத்துவதற்காக, தீக்குச்சியைக் கொளுத்தி, தனது பிள்ளையின் வாயில் நெருக்கமாக வைத்திருந்ததாக சந்தேகநபர் கூறுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அப்போது குழந்தையின் மேல் உதடு எரிந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## "மீன் பிடிப்பதில் ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்"

■ எம்.எம்.அஹமட் அனாம்





வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக பகுதியில், மீன் பிடித் தொழிலில் ஈடுபடும், படகு உரிமையாளர்களால் தொழில் செய்வதில் ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி எதிர்ப்பு போராட்டத்தை துறைமுகம் முன்பாக வியாழக்கிழமை (28) முன்னெடுத்தனர்.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக நிருவாகம் மற்றும் மீன் பிடித் திணைக்களம் என்பவற்றுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வெசல் மொனிட்டரிங் சிஸ்டம் (VMS) கட்டணம் தொடர்பாகவும், ஐஸ் கட்டியின் விலை அதிகரிப்பு, தரமான வலை கிடைப்பதில்லை, துறைமுக இடம் பற்றாக்குறையாகவுள்ளதை நிவர்த்தி செய்து தருமாறு கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

கடத்தல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் படகுகளை கண்காணிக்கும் வகையில், வெசல் மொனிட்டரிங் சிஸ்டம் (VMS) என்ற கருவிகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் இலவசமாக வழங்கியது. அந்த கருவிகளுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய்அறவிடுவதும் அப்பணத்தினை செலுத்தாத பட்சத்தில் படகு தொழிலுக்கு செல்வதற்கான அனுமதியை மறுப்பதும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்ட காரர்கள் தெரிவித்தனர்.



## மீலாதுன் நபி விழா...



நபிகள் நாயகத்தின் பிறந்த தினமான செப்டெம்பர் 28ஆம் திகதி, மீலாதுன் நபி கொண்டாட்டங்கள் மட்டக்களப்பு , யாழ்ப்பாணம் , சாய்ந்தமருது , காத்தான்குடி , அக்கரைப்பற்று மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. நபிகள் நாயகத்தின் புகழ் கூறும் விசேட மௌலித் வைபவங்கள் பள்ளிவாசல்களில் இடம்பெற்றன.

தமிழ்மிரர் நிருபர்கள்



















# வாசிப்பு கலாசாரத்தை ஊக்கப்படுத்தும் மையம் அவசியம்

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், புத்தகக் கண்காட்சி தற்போது நடைபெறுகிறது. ஒக்டோபர் 1ஆம் திகதி வரை மட்டுமே நடத்தப்படும். எனினும், தமிழ்மொழி பேசும் சமூகத்தினரிடம் வாசிப்புப் பசி, தேடல் எவ்வளவுக்குக் குறைந்துள்ளது என்பது அங்கு சென்றவர்களுக்கே மட்டுமே புரியும்.

ஏனைய மொழிகள் தொடர்பிலான புத்தகக் கூடாரங்களுக்குள் நுழைய முடியாத வகையில் சனநெரிசல் காணப்படுகின்றது. தமிழ் மொழிமூலமான புத்தகங்களைத் தேடுவோரின் எண்ணிக்கை குறைவு, கூடாரங்களின் எண்ணிக்கையும் குறைவு, அதன் அளவும் குறைவாகவே இருக்கின்றது. கடந்த காலங்களில் தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு கூடாரங்களின் அளவை, வெளியீட்டாளர்கள் குறைத்திருக்கலாம்.

"நாம் கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற யதார்த்தத்தை நாம் எல்லோரும் புரிந்து கொண்டிருக்கிறோம். இதன்படி, நாம் கற்க வேண்டியவை ஏராளம். ஆகவே, வாழ் நாள் முழுவதும் நாம் கற்பதற்கு வாசிப்புப் பழக்கம் மிக மிக அவசியமாகின்றது.

வாழ்க்கை முழுவதும் ஒரு மனிதன் கற்றுக்கொண்டே இருக்கிறான். தினம் தினம் புதுப் புது விடயங்களை ஒவ்வொரு மனிதனும் அறிய வேண்டியுள்ளது.

மாணவப் பருவத்தில் வாசிப்புப் பழக்கத்தை கொண்டிருப்பது அவர்களின் அறிவு மற்றும் ஆற்றல் மேம்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். ஆகவே, பாடசாலைகளில் வாசிப்பு பழக்கத்தை ஊக்கிவித்தல் அவசியமாகும். பத்திரிகைகளை தினமும் வாசிக்கின்ற பழக்கத்தை பெற்றோரும், ஆசிரியர்களும் ஊக்கிவிக்க வேண்டும்.

கொரோனாவுக்கு முன்பிருந்த வாசிப்பு பழக்கம் மக்களிடத்தில் குறைந்துவிட்டது. பாடசாலை கல்வி நிகழ்நிலைக்கு (ஒன்லைன்) வந்துவிட்டதால், புத்தகங்களை புரட்டுவதற்குக் கூட மாணவர்கள் கூச்சப்படுகின்றனர்.

ஒவ்வொரு வீடுகளிலும் ஆகக்குறைந்து இரண்டொரு அலைபேசிகள் இருக்கின்றன. செய்திகளும் உடனுக்கு உடன் மிகச் சுருக்கமாக கிடைக்கின்றன. இதனால், பத்திரிக்கை மீதான நாட்டம் குறைந்துள்ளது.

அலைபேசிகளில் மூழ்கிக் கிடப்பவர்களில் பலரும் தங்களுடைய வாழ்க்கையை தொலைத்துவிட்டனர். இன்னும் சிலர் அடிமையாகிவிட்டனர். பலரும் தங்களுயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். அந்தளவுக்கு அலைபேசி அடிமையாக்கி வைத்துள்ளது.

அவற்றிலிருந்து மீட்டெடுக்க வேண்டுமாயின், மாணவர்களிடத்தில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவேண்டும். வாசிப்பு ஒருவருக்கு விலை மதிப்பில்லாத சாதனமாக எப்போதும் இருக்கும். நூலகங்கள் வாசிப்பு பழக்கத்துக்கு மாணவர்களை இழுத்துச் செல்கின்ற ஒரு களமாகவும், வாசிப்பு கலாசாரத்தை ஊக்கப்படுத்துகின்ற மையமாகவும் அமைதல் வேண்டும்.

புதிய தேடல்களின் ஊடாகவே ஒவ்வொரு மனிதனும் புது மனிதனாக ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டே இருக்கின்றான். பாடசாலைகளுக்கு முன்னதாக வீடுகளில் குடும்பமாக இருந்து, இலத்திரனியல் சாதனங்களை முற்றாக முடக்கி ஏதாவது ஒன்றை வாசிப்பதற்கு ஒருசில மணிநேரமாவது ஒதுக்கிக்கொள்ளவேண்டும்.

நவீன வளர்ச்சி ஒருவருடைய வாழ்க்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது எனலாம். இதனால் புத்தகங்களை வாசிக்கின்ற பழக்கம் வேகமாக குறைவடைந்து வருகின்றது. அதிலிருந்து மீண்டெழுவதற்கு வாசிப்பு கலாசாரத்தை ஊக்கப்படுத்துகின்ற மையம் அவசியமாகும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்கு உரிய காரியங்களை மட்டும் செய்து, சமூகசேவைகள் எதையும் செய்யாதவர், ஆன்மிகம் பற்றிப் பேசுவதில் ஏது பயன்?

நற்செயல் புரிந்தவர்கள் மௌனமாகிவிடுகின்றனர். ஆனால், எதுவுமே செய்யாதவர்கள், பொதுநலன் பற்றிப் பேசுவது வேடிக்கை. பொய்யான பிரசாரங்களை அள்ளி வீசுபவர்கள் சுயநலவாதிகள். இவர்களைக் கண்டுகொள்ள வேண்டாம்.

தேசத்துக்கு தியாகம் செய்கின்றோம் என்று சொல்லியே தலைவராகி விடுகின்றவர்கள், சாதாரண தொழிலாளி செய்கின்ற பணிகளைக் கூட செய்கின்றார்களா?

கஷ்டப்பட்டே வாழ வேண்டும் என்ற விதி நிரந்தரமாகி விடக்கூடாது. எனினும் இன்னமும் ஏழ்மை முடிவுக்கு வரவே இல்லை.

சில பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவிபுரிந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் அதை வெளயில் காட்டிக்கொள்வதில்லை. சொல்லாமல் செய்வோர் நல்லோர்.


தொண்டு நிறுவனங்களுக்கு பலவிதமான உதவிகளை சாதாரண மக்களும் நல்குகின்றனர். வியாபாரிகள் பொருட்களைப் பதுக்காமல் இருந்தாலே போதும் அதுவே பெரிய உதவி.

பேராசையுடன் பொருட்களைத் தேடுபவர்கள், மற்றவர்களின் நிலைகளை உணரவேண்டும். எல்லோரும் வாழவேண்டும். வையகம் எமக்கானது மட்டுமல்ல; உணர்வார்களா?

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குரங்கு தொல்லையால் பெரும் சிரமம்



மலையகத்தை பொறுத்தவரையில் பிரதான சில நகரங்களுக்கு குரங்குகள் படையெடுக்க தொடங்கிவிட்டன. இதனால், தாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா நகருக்கு படையெடுத்திருக்கும் குரங்குகள், வர்த்தக நிலையங்களின் முன்பாக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பொருட்களை அலாக்காக தூக்கிச் சென்றுவிடுகின்றன. அத்துடன் பழக்கடைகளில் பழங்களை காட்சிப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா தபால் கந்தோர் வீதியிலுள்ள பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் காரியாலய பகுதியிலுள்ள களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டுள்ள பருப்பு மூடைகளை கடித்து குதறி அதில் உள்ள பருப்பை குரங்குகள் நாசம் பண்ணுவதாக பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் முகாமையாளர் தெரிவித்தார்.

இவை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்தி இந்த குரங்குகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்

### கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 20

# சுதந்திர இலங்கையின் ஜனநாயகப் படுகொலை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் சுதந்திரம் மக்களுக்கானதாகவன்றி அதிகார வர்க்கத்தின் நலன் சார்ந்ததாகவே இருந்தது என்பதை சுதந்திரத்திற்கு பின்னதான முதற் தசாப்தகாலம் தெளிவாகக் காட்டி நின்றது. ஆனால் சுதந்திர இலங்கையின் இனவாதப் போக்கை வெளிப்படையாக காட்டுவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை.

பிரித்தானியக் கொலனி ஆட்சியின் கீழ் தோட்டத் துறையில் மட்டுமன்றிப் புகையிரதப் பாதை நிர்மாணம், வீதி அபிவிருத்தி, கொழும்புத் துறைமுகம் உட்பட்ட பலவேறு துறைகளில் கடுமையான சரீர உழைப்புத் தேவைப்பட்டது. அதை உள்ளூரிற் பெறுவதில் உள்ள சிரமங் காரணமாகத் தென்னிந்தியாவிலிருந்து அன்றைய சென்னை மாநிலத்தின் தென்பகுதியாய் இருந்த வறுமைப்பட்ட பகுதிகளிலிருந்து பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்டோரின் வாழ்வு மிகவும் கொடுமையாக இருந்தது. இங்கு கொண்டுவரப்பட்ட கூலி விவசாயிகளும் நிலமற்ற விவசாயிகளும் மிக மோசமான வாழ்நிலையை எதிர்நோக்கினார்கள். இதனால் பலர் தமது ஊர்களுக்குத் திரும்பிச் செல்ல முனைந்தனர். இதனால் தென்னிந்தியாவில் இருந்து ஆட்களைக் கொணர்ந்து தக்கவைப்பது கடினமானதாக இருந்தது. இதனால் கங்காணி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது பல வகைகளில் ஆபிரிக்காவில் இருந்து கடத்தி வரப்பட்ட கறுப்பின மக்களின் வாழ்க்கைக்கு ஒத்ததாக இருந்தது. ஒரே ஒரு வித்தியாசம் கறுப்பின மக்களை அடிமைச் சந்தையில் விற்க முடிந்தது. இங்கு அதற்கான தேவை இருக்கவில்லை. ஏனெனில் அதையொத்த அடிமை முறையை நடைமுறையில் இருந்த கங்காணி முறை பார்த்துக் கொண்டது.

பெரும்பாலான தேயிலைத் தோட்டத் தொழிலாளர் மலைக் காடுகளிற் புதிதாக உருவாக்கப்பட்ட தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். சிங்களக் கிராமங்களை அண்டிய தோட்டங்களில் வாழ்ந்த தோட்டத் தொழிலாளருக்கு அச்சிங்கள மக்களோடு உறவுகளைப் பேணும் வாய்ப்பு இருக்கவில்லை. தோட்டத் தொழிலாளருக்கு விதிக்கப்பட்டிருந்த கடுமையான கட்டுப்பாடுகள் இதற்கு அடிப்படைக் காரணியாக இருந்தது. இதனால் தமிழ்த் தோட்டத் தொழிலாளருக்கு சிங்கள மக்களோடு பழகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க நிலமற்ற சிங்கள விவசாயிகளிடம் தமது நிலங்கள் இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்றும் இதை அவர்கள் பிரித்தானியக் கொலனியாதிக்கத்தின் துணையுடன் சாத்தியமாக்கி விட்டார்கள் என்ற எண்ணம் மேலோங்கியது. இது தோட்டத் தொழிலாளருக்கு எதிரான இனப்பகையாக காலப்போக்கில் வளர்ந்தது.

தேயிலைத் தோட்டங்களின் நிலைமைகளுக்கு மாறாக, இறப்பர் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளரும் மலையகத் தமிழ்த் தொழிலாளரும் இணைந்து வேலை செய்கிற வாய்ப்புக்கள் இருந்தன. இதனால் அவர்களிடையே ஆரோக்கியமான உரையாடலும் உறவும் இருந்தது. இதனால் இவ்விரு சமூகங்களும் இனப்பகை இல்லாமல் வெகுகாலம் வாழ்ந்தன.

மலையகத் தமிழர் இலங்கைக்கு வந்து நூறாண்டுகள் கடந்த நிலையில் இரண்டு விதமான போக்குகள் விருத்தி பெற்றன. முதலாவது, மலையகத் தமிழரை இலக்கு வைத்த இனவாதம் வெளிப்படையாக அரசியலிலும் பொதுவெளிகளிலும் இயங்கத் தொடங்கியது. இரண்டாவது, மலையகத் தமிழரது அடிப்படை உரிமைகளே மறுக்கப்பட்டு மனித உரிமைகளே அற்ற ஒரு சமூகமாக நூறாண்டுகளுக்கு மேலாக அவர்கள் வாழ்ந்து வந்த நிலையில், இதை நன்கறிந்த சிறுபான்மையின அரசியல் தலைவர்கள் அவர்களுக்காக ஏதும் பேசியதில்லை. குறிப்பாக அவர்கள் மீதான இனவாத அரசியல் முன்னெடுக்கப்பட்ட போது அதை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இதில் விலக்கானவராக பொன்னம்பலம் அருணாசலம் இருந்தார். அவரது குரலும் ஆதரவும் மலையகத் தமிழருக்குக் குரல் கொடுக்கும் அமைப்புகள் உருவாக முக்கிய காரணியாக இருந்தது என்பது முக்கியமானது.

மலையகத் தமிழரிடையே தாம் இந்த மண்ணுக்கு உரியோர் என்ற உணர்வும் ஏற்பட்டு அவர்களும் இலங்கையர்களாக உணர நீண்டகாலம் எடுத்தது. இந்த உணர்வே அவர்கள் இலங்கையில் உள்ள ஏனையோருக்கு சமமானவர்கள் என்ற நம்பிக்கையைக் கொடுக்கும். இந்தத் தாமதத்திற்கு மலையக மக்களின் பிரதிநிதிகள் என்று தம்மை அழைத்துக் கொண்ட அரசியல் தலைவர்கள் காந்தியும் நேருவுமே தமது தலைவர்கள் என்றும் இந்தியாவே தாய்நாடு என்றும் தொடர்ந்து சொல்லி வந்தனர். இந்த எண்ணம் சாதாரண மலையகத் தமிழரிடம் நம்பும்படி கொண்டு சேர்க்கப்பட்டது. பலருக்கு எப்போதோ தொடர்புவிட்டுப் போன இந்தியாவை தாய்நாடாகக் கொள்வதில் சிக்கல்கள் இருந்தபோதும் தலைவர்களின் சொற்களை நம்பினர். குறித்த மேட்டுக்குடித் தலைமைகளுக்கு இந்த 'இந்திய' அடையாளம் தேவையானதாக இருந்தது. ஆனால் அந்த அடையாளமே அவர்களுக்கு 'அந்நியர்' என்ற பெயரைப் பெற்றுக் கொடுக்கவும் அதன்வழி அவர்களுக்கு எதிரான இனவாதம் கட்டவிழ்க்கப்படவும் காரணமானது.

இந்தப் பின்புலத்தில் சுதந்திரமடைந்த இலங்கையில், பிரதமர் டி.எஸ். சேனநாயக்க எடுத்த முக்கியமான ஒரு நடவடிக்கை 1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டம். அதன் கீழ், இந்தியத் தமிழர் எனவும் இந்திய முஸ்லிம்கள் எனவும் அன்று அறியப்பட்ட இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. சுதந்திரத்துக்கு முந்தைய இலங்கையிலேயே மலையகத் தமிழருக்கு எதிராகத் தொடர்ந்து பேசி வந்த டி. எஸ். சேனாநாயக்கவின் இச்செயல் ஆச்சரியமானதல்ல. ஆனால் இவ்வாறு ஒன்று நடக்கும் என்று சிறுபான்மையினத் தலைவர்களால் உணர இயலாதபடி அவர்களது மேட்டுக்குடி மனோபாவம் தடுத்தது.

பிரசாவுரிமை பறிக்கப்பட்டதன் நோக்கங்கள் இரண்டு. ஒன்று டி.எஸ். சேனநாயக்காவின் சிங்களப் பேரினவாதம் தொடர்பானது. மலையகத் தமிழருக்கும் சிங்கள தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் வலுவான அரசியல் உறவுகள் இருக்கவில்லை. இதனால் அரசியலில் அவர்களை ஓரங்கட்டுவது மேட்டுக்குடி அரசியல் தலைமைகளின் இணைந்த முடிவாக இருந்தது. குறிப்பாக தமிழ் அரசியல் தலைமைகளின் மனோநிலையில் மலையகத் தமிழர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட ஒரு சமூகமாகக் கருதினார்கள். சொந்த சமூகத்தில் சாதிய அடிப்படையில் தம்மக்களை மோசமாக ஒடுக்கும் ஒரு சமூகம், மலையக மக்கள் குறித்து அக்கறையற்று இருந்தது வியப்புக்குரியதல்ல. அதற்கும் மேலாக தங்களது வாக்கு அரசியலைத் தீர்மானிக்க ஒரு சமூகம் பற்றிய கவனமோ அக்கறையோ பாராளுமன்றத்தை அலங்கரித்த ஈழத்தமிழ்ச் சிறுபான்மைப் பிரதிநிதிகளுக்கு இருக்கவில்லை.

இச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது இந்த உரிமைப் பறிப்பு எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு எதிராகவும் தொழிற்படக்கூடும் என்று எச்சரித்தோரும் உண்டு. அவர்கள் சமூக நீதியின் அடிப்படையில் இதனைக் கடுமையாக எதிர்த்தனர்.

டி.எஸ். சேனநாயக்கவின் 2ஆவது நோக்கம் இடதுசாரி இயக்கத்தின் எழுச்சி தொடர்பானது. மலையகத் தமிழரிடையே தொழிற்சங்கங்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதனால் இடதுசாரிகளுக்குக் கணிசமான ஆதரவு இருந்தது. அதேவேளை அரசியல் ரீதியாக இன்னமும் வளர்ச்சி பெறாத பின்தங்கிய ஒரு சமூகமாக இருந்த மலையக தமிழரின் குடியுரிமையைப் பறிப்பதன் மூலம் அவர்கள் ஒரு போராட்டச் சக்தியாக வளராது தடுக்க வேண்டும் என்று சேனாநாயக்க விரும்பினார். குறிப்பாக வலிமையான தொழிலாளர் குழுவாக இருக்கின்ற மலையகத் தமிழரை அரசியல் ரீதியாக அழிப்பதும் அதனூடு இடதுசாரி இயக்கம் செல்வாக்குப் பெறாமல் தடுப்பதுமாகும்.

இந்தச் சட்டம் இலங்கையின் சிங்களப் பேரினவாதத்தின் தன்மையையும் அதனுடன் இணைந்த மேட்டுக்குடி வர்க்க நலன்களினதும் ஒருங்கிணைந்த ஒரு செயற்பாடாக இருந்தது. இது வாக்கெடுப்புக்கு வந்தபோது இடதுசாரிகள் அனைவரும் எதிர்த்து வாக்களித்தனர். தமிழ் முஸ்லீம் அரசியல்வாதிகள் பலர் எதிர்க்கவில்லை. அது குறித்துத் தனியே நோக்கலாம்.

இங்கு நோக்க வேண்டியது மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட பிறகு, அதை மீள வென்றெடுப்பதற்கான வெகுசன மக்கள் இயக்கம் ஒன்றை உருவாக்க முடியவில்லை. மலையக மக்களை ஒன்றுதிரட்டிப் போராடும் நோக்கம் அவர்களின் பிரதிநிதியாகத் தன்னை அறிவித்துக் கொண்ட இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற பேரில் உருவாகிப், பின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று தன்னை அழைத்துக் கொண்ட அமைப்பிடம் இருக்கவில்லை.

மலையக மக்களுக்கு குடியுரிமையைப் பெற்றுக் கொடுக்க சிங்கள இடதுசாரிகள் மத்தியில் ஆதரவு இருந்தது. இலங்கையின் வடக்கில் இது குறித்த விவாதங்களோ அரசியல் கருத்தரங்குகளோ நடைபெறவில்லை. 'நாங்கள் - அவர்கள்' என்ற வேறுபாடு யாழ்ப்பாண சமூகத்தில் வேரூன்றி இருந்தது. இது ஈழத்தமிழ் அரசியலின் முக்கியமானதொரு புள்ளி. ஒடுக்குமுறையும் உரிமை மறுப்பும் தமக்கு நிகழும் போது எல்லோரும் குரல் கொடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பதும் அதேவேளை மற்றவர்களுக்கு நிகழும் போது மௌனம் காப்பதும். இந்த மௌனம் எவ்வளவு ஆபத்தானது என்பதைத் ஈழத் தமிழர்கள் விரைவிலேயே உணர்ந்து கொண்டார்கள்.

# இலங்கையின் சுகாதார பராமரிப்பு கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ஜப்பான் உதவி



இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு MRI இயந்திரமொன்றை ஜப்பானிய தூதரகம் இலங்கைக்கு கையளித்திருந்தது. இந்நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதில் சுகாதாரத் துறை அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல அடங்கியிருந்தார். இரு நாடுகளுக்குமிடையே ஆழமான பிணைப்பை வெளிப்படுத்தியிருந்ததுடன், இலங்கையின் சுகாதார பராமரிப்பு கட்டமைப்பை வெளிப்படுத்துவதற்கான திரண்ட அரப்பணிப்பையும் உறுதி செய்திருந்தது.

ஜப்பான் முன்னர் CT ஸ்கானர் இயந்திரமொன்றையும் இதர மருத்துவ சாதனங்களையும் தேசிய வைத்தியசாலைக்கு கடந்த ஒக்டோபர் மாதத்தில் கையளித்திருந்தது. இலங்கையில் படங்களினால் இனங்காணல் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த சாதனம் அமைந்திருந்தது. இந்த நவீன உள்ளம்சங்களின் உள்ளடக்கங்களுடன், தேசிய வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய கையளிப்பு வழங்கும் நிகழ்வினூடாக வழங்கப்பட்ட ஜப்பானின் சாதனத்துக்கு, “ஜப்பான்  இலங்கை நட்புறவு இனங்காணல் படக் கட்டமைப்பு” என பெயரிடப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே துரித நட்புறவை கட்டியெழுப்புவதற்கான சக்தி வாய்ந்த எடுத்துக்கட்டாக அமைந்துள்ளது.

ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி கருத்துத் தெரிவிக்கையில், “இரு நாடுகளுக்குமிடையிலான நீண்ட காலம் நிலைத்திருக்கும் அடையாளமாக ஜப்பான் இலங்கை நட்புறவு இனங்காணல் படக் கட்டமைப்பு அமைந்துள்ளது. இலங்கை மக்களுக்கு தரமான சேவைகளை மேம்படுத்திக் கொடுப்பதில் இந்த நிலையம் முக்கிய பங்காற்றும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். இந்த நவீன வசதிகள் படைத்த மருத்துவ வசதிகளினூடாக இலங்கை மக்களின் உயிர்களைக் காப்பது மாத்திரமன்றி, அவர்களின் நலனை மேம்படுத்துவதிலும் பங்களிப்பு வழங்குவதாக அமைந்திருக்கும்.” என்றார்.

ஜப்பான் மற்றும் இலங்கை இடையே உறுதியான பங்காண்மையை ஏற்படுத்திக் கொடுப்பதில் இந்த நிகழ்வு முக்கிய பங்காற்றியிருந்ததுடன், நாட்டின் சுகாதார பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதற்கான ஜப்பானின் ஒப்பற்ற அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

# ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் 2023 நிறைவு



இலங்கையர்களின் அபிமானம் வென்ற சொக்லட் வர்த்தக நாமமான, சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின், ரிட்ஸ்பரி, 34ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் 2023 போட்டிகள், அண்மையில் இரத்மலானை விமானப் படை ஸ்கொஷ் திடலில் பூர்த்தியடைந்ததாக அறிவித்துள்ளது.

தேசிய மட்டத்தில் ஸ்கொஷ் போட்டிகளின் வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்புக் ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி வரும் ரிட்ஸ்பரி, தொடர்ச்சியான 15 வருடங்களாக இந்த பெருமைக்குரிய சம்பியன்ஷிப் போட்டிகளின் நம்பிக்கையை வென்ற அனுசரணையாளராகத் திகழ்கின்றது. செப்டெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்த ஆண்டின் நிகழ்வின் போது, 450 தனிநபர் பங்குபற்றுநர்கள் பங்கேற்றிருந்தனர். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பங்குபற்றுநர்களில் 40% அதிகரிப்பு பதிவாகியிருந்தது. ஆறு வயதுப் பிரிவுகளில் இளம் ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்றிருந்தனர். 9, 11, 13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன.

ஆண்கள் பிரிவில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் நெவிந்து லக்மன் கனிஷ்ட தேசிய சம்பியன் பட்டத்தை வென்றார். றோயல் கல்லூரியின் செஹாத் பெரேரா இரண்டாமிடத்தையும், ரோயல் கல்லூரியின் மதீஷ விஜேசேகர மூன்றாமிடத்தையும் பெற்றனர். பெண் பிரிவில், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் சனித்மான சினாலே கனிஷ்ட தேசிய சம்பியன் பட்டத்தையும், அதே பாடசாலையின் தேமினி பள்ளியகுரு இரண்டாமிடத்தையும் பெற்றார்.

“வருடாந்த ஸ்கொஷ் நாட்காட்டியில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் உறுதியான இடத்தைப் பெற்றுள்ளது. நாட்டின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த இளம் வளர்ந்து வரும் திறமைசாலிகளை ஊக்குவிக்கும் களமாக இது அமைந்திருந்தது. ஆரம்பகட்டத்தில் இந்த விளையாட்டை மேம்படுத்துவதில் ரிட்ஸ்பரி காண்பித்திருந்த அர்ப்பணிப்பில், மாவட்ட மட்ட ஊக்குவிப்புகள் முக்கிய பங்காற்றியிருந்தன. இதனால் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது. அடுத்த தலைமுறை ஸ்கொஷ் சம்பியன்களை உருவாக்க முடிந்தது.” என இலங்கை ஸ்கொஷ் சம்மேளனத்தின் தலைவர் தம்மிக விஜேசுந்தர குறிப்பிட்டார்.

சிபிஎல் ஃபுட்ஸ் இன்டர்நஷனல் (பிரைவட்) லிமிடெட் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக இலங்கையில் ஸ்கொஷ் விளையாட்டை மேம்படுத்துவதற்கு ரிட்ஸ்பரி தொடர்ச்சியாக ஆதரவளித்திருந்தது. விளையாட்டில் ஈடுபாடு அதிகரிப்பதை கண்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், விளையாட்டு வீர, வீராங்கனைகள் சிறந்த முன்னேற்றத்தையும் வெளிப்படுத்துகின்றனர். இந்த ஆண்டின் சம்பியனின் பெறுபேறுகள் இதற்கு சான்றாக அமைந்துள்ளது.” என்றார்.

# SLT-MOBITEL’இன் ‘7xFun’ Add-on வசதி





SLT-MOBITEL, தனது ஹோம் புரோட்பான்ட் பாவனையாளர்களுக்கு நம்பமுடியாத களிப்பூட்டும் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்காக புதிய ‘7xFun’ Add-on data bundle ஐ அறிமுகம் செய்துள்ளது.

YouTube, Viber, WhatsApp, Facebook, IMO, Instagram மற்றும் TikTok போன்ற சமூக ஊடக கட்டமைப்புகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட add-on data bundle ஆக அமைந்திருப்பதுடன், இளம் வயதினர் மற்றும் குடும்பத்தாருக்கு வலுச்சேர்க்கப்படுகின்றது. SLT-MOBITEL’இன் 7xFun add-on என்பது 20GB மீளத் தொடரும் டேட்டா பண்டலாக அமைந்திருப்பதுடன், ஏழு நாட்களுக்கு செல்லுபடியாகும். ரூ. 195 எனும் சகாய விலையில் ஏழு அப்ளிகேஷன்களை பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது. மேலும், SLT-MOBITEL ஹோம் புரோட்பான்ட் பாவனையாளர்கள், அடிப்படை புரோட்பான்ட் பக்கேஜ்களுக்கு பதிவு செய்து கொண்டு, data add-ons ஐ கொள்வனவு செய்யலாம். Data add-ons மீள தொடர்வதாக அமைந்திருப்பதுடன், எந்நேரத்திலும் பதிவு நீக்கம் செய்து கொள்ளலாம்.

இளம் வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் தற்போது தமக்கு பிடித்த சமூக ஊடக அப்ளிகேஷன்களை SLT-MOBITEL 7xFun Add-on data bundle க்கு பதிவு செய்து கொண்டு அனுபவித்து மகிழலாம். இலகுவாக செயற்படுத்திக் கொள்ள முடியும் என்பதால் சிக்கல்களற்ற SLT-MOBITEL 7xFun add-on data bundle ஊடாக, தினசரி வாழ்க்கைக்கு அவசியமான இணைய வசதி வழங்கப்படுகின்றது.

7xFun add-on data bundle ஐ செயற்படுத்திக் கொள்வதற்கு MySLT App அல்லது MySLT Portal பயன்படுத்தலாம்.



## மயங்க வைக்கும் கன்னியடி

மயங்க வைக்கும் விழி உனக்கு
தயங்கி நிற்கும் மனம் எனக்கு
முளைத்து என்னுள் நிற்பவளே
தொலைந்த என்னுள் பொற்கவியே
மனம் இருக்கு படர்வதற்கு
பயம் எனக்கு தொடர்வதற்கு

நீயே உன்னை சுற்றி காவலடி
நானோ ஊரை சுற்றும் காளையடி
இருவிழிகளும் உன்னை தேடுதடி
இருதயம் தினம் உன்னை நாடுதடி
இருந்தும் மனதில் ஓர் தயக்கமடி

மயங்க வைக்கும் கன்னியடி
கரம் தொடவே எல்லையடி
வாரமாய் வருவதற்கு அணையடி
அதை போடுவதும் உந்தன் மனமாடி

மயங்க வைக்க ஆசை சொல்லு
மணமுடிக்க உன் மனமோ கல்லு
மறைந்து விட்டு விதியென சொல்லு
மறைய முன்னம் என்னை கொன்று
செல்லு

வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.



## கட்டழகுப் பெட்டகமே...

கட்டழகுப் பெட்டகமே
கன்னிமகள் ரத்தினமே
விட்டகுறை தொட்டகுறை
வீழ்ந்தேனடி காதலிலே
பட்டதுயர் சாயுமடி
பாவையுன்றன் பார்வையிலே
இட்டமுடன் கிட்டேவந்தால்
ஏதுலகில் துன்பமடி?


வட்டவிழி பேசுதடி
வார்த்தைமணம் வீசுதடி
கட்டிவைத்த காதலெல்லாம்
காற்றினிலே கீதமடி
எட்டிநிற்க வேண்டாமடி
என்னுயிரே வந்திடடி
தொட்டுநான்; பேசுகையில்
தோகைமயில் வாடுமோடி?

காற்றாடுங் கூந்தலுக்குள்
கட்டிவைத்தாய் என்னையடி
ஆற்றோர நிழல்போலே
ஆனதென்றன் உள்ளமடி
தோற்றோடி வீழ்ந்தாலும்
தோகையுன்றன் காலடியில்
நாற்றாக நான்முளைப்பேன்
நல்லசேதி கூறாயோடி?

வீழருவி போலிருப்பேன்
வீசுதென்ற லாயிருப்பேன்
சூழநின்று சோலையெனச்
சுந்தரியைக் காத்திருப்பேன்
வாழவகை யில்லையடி
வான்மகளே உன்றனடி
ஆழப்பற்றிக் கொண்டேனடி
ஆறுதலைத் தந்திடடி.

கந்தவனம் கோணேஸ்வரன்.





## காலத்தின் கழிவறை!

கண்ணின் கதிர்களுக்குள்
நங்கூரம் பாய்ச்சிக்கொள்!
எங்கும்
நகராதிருக்கட்டும்!

இதயத்திற்கு
ஈயம் பூசி
இறுக்கிக் கொள்...
இளகிவிடாதிருக்கட்டும்!

உயரும் கைகளும்
உடைக்கப்பட்டு...
முன்னேறும்
உன் கால்களும்
முறித்துப் போடப்படலாம்...
முடங்கி விடக்கூடும்
உன் பயணம்!

உள்ளத் தகிப்பில் ஒருபோதும்
சுவாசக் காற்றை
சூடேற்றி விடாதே
தணிந்தேயிருக்கட்டும்!

குரல் வளையின்
கர்ப்பவேதனையை
தாங்கிக் கொள்...
இல்லையேல் ஷ உன்
சிந்தனைகளின் பிரசவம்
சீரழித்து விடப்படலாம்!

உன்
விரல்களின் சலாம்வரிசையை
ஒடுக்கிக்கொள்...
வெளுத்தேயிருக்கட்டும்
காகிதத் தாள்கள்!

ஆனால்...
உணர்வுகளை மட்டும்
எங்கோ...
எரிமலைக்குள்
பதப்படுத்தி வைத்துவிடு...
கனன்று கொண்டிருக்கட்டும்!
ஆருக்குந்தெரியாமல்...

இப்போ
காலத்தின் கழிவறைக்குள்...
கோலம் மாறியிருக்கிறது
மனிதம்...

கொட்டிய ஆரன்



## புத்தகம்


எழுத்துக்களின் குவியலை
படிப்பதற்கு திறக்கிறேன்;
மூடுவதற்கோ மனமில்லை;
நேரத்திற்கும் தடையில்லை;
பேதமை போக்கும் உன்னிடம்
பேரடிமை ஆகிவிட்டேன் நான்..!!

### மழை

வரும் முன் இருளை தருகிறாய்
வந்த பின் குளிரை தருகிறாய்
இருளில் கனத்த இதயம்
குளிரில் கதகதப்பை தேடுகின்றது
உன் வருகையால்

கேஷானி தினூஷிக்கா
கொழும்பு





கனடா


# மன்னிப்பு கேட்ட பிரதமர்

உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கனடாவுக்கு கடந்த 22ஆம் திகதியன்று வந்திருந்தார்.

அவருடன் வந்திருந்த 98 வயதான போர் வீரர் யாரோஸ்லாவ் ஹூன்கா கனடா பாராளுமன்றத்தில் கௌரவிக்கப்பட்டார்.

இதனிடையே அவர் 2-ம் உலகப்போரின்போது ஹிட்லரின் நாஜிப் படையில் முக்கிய பொறுப்பு வகித்தவர் என்றும் லட்சக்கணக்கான யூத மக்கள் உயிரிழக்க காரணமானவர் எனவும் தகவல் பரவியது. இதற்கு அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மன்னிப்பு கோரியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், இந்த விவகாரம் கனடா பாராளுமன்றத்தை முழுவதுமாக தர்ம சங்கடத்துக்கு உள்ளாக்கி இருக்கிறது. இந்த நிகழ்வுக்கு வருந்துகிறேன். அப்போதைய சூழலை அறியாமல் யூத மக்களின் நினைவுகளை மீறியதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.



வொஷிங்டன்



## ஊழியரை கடித்த பைடனின் நாய்

அமெரிக்காவில் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியை அமெரிக்க சீக்ரெட் சர்வீஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அவரது மனைவி ஜில் பைடன் ஆகியோர் ஜெர்மன் ஷெப்பர்டு இனத்தை சேர்ந்த நாய் ஒன்றை வளர்த்து வருகின்றனர்.

இந்நிலையில் வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை வளாகத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த பாதுகாப்பு படை ஊழியரை நாய் கடித்துள்ளது. உடனடியாக அந்த பாதுகாவலருக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து அவர் தற்போது நலமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெள்ளை மாளிகைக்கு இந்த நாய் வந்தது முதல் 2022-ம் ஆண்டு நவம்பர் வரை 10 முறை இது போன்று பாதுகாவலர்களை கடித்துள்ளது. இந்நிலையில் 11-வது முறையாக ஒரு பாதுகாப்பு ஊழியரை கடித்துள்ளது.

## நீரில் மிதக்கும் மசூதி

நீரில் மிதக்கும் ஒரு மசூதியை டுபாய் அரசாங்கம் 2 ஆயிரம் சதுர மீற்றரில் 55 மில்லியன் திராம்கள் மதிப்பீட்டில் கட்டமைத்து வருகின்றது. உலகிலேயே நீருக்கடியில் ஒரு மசூதி அமைக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

இந்த மசூதி உலகின் அதிசயங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதற்கான முன்னெடுப்பை எமிரேட்ஸ் இஸ்லாமிய விவரங்கள் துறை மற்றும்



சாரிட்டபிள் செயல்பாட்டு துறை (IACAD) மேற்கொண்டு வருகிறது.

ஒரே நேரத்தில் 600 பேர் தொழுகை நடத்த முடியும். இதற்கான வேலைகள் வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகி வரும் 2025 ஆம் ஆண்டு முடிவுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் ஆப்பிரிக்கா

## மண்டேலாவின் பேத்தி மரணம்

தென் ஆப்பிரிக்கா நாட்டில் ஜனநாயக முறைப்படி முதல் ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

நிற வெறிக்கு எதிராக போராடிய தலைவர்களில் முக்கியமானவராக திகழ்ந்தார். இவரது பேத்தி ஜோலேகா மண்டேலா (வயது 43). இவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டார்.

இதனால் அவருக்கு கல்லீரல், நுரையீரல்,



முதுகுதண்டு போன்ற உறுப்புகள் பாதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் மரணம் அடைந்துவிட்டார்.

அரியலூர்



## தந்தையால் மகள் 7 மாத கர்ப்பம்

இந்தியா - அரியலூர் மாவட்டம் செந்துறை ராயல் சிட்டி பகுதியை சேர்ந்த தந்தை, தனது மகளை பல காலமாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார். இந்நிலையில் சிறுமி 7மாத கரப்பமடைந்துள்ளார்.

மகளின் உடலில் மாற்றங்கள் ஏற்படுவதை கண்டு சிறுமியின்தாயார் அதிர்ச்சி அடைந்துள்ளார். இதன்பின் குறித்த பகுதியில் இருக்கும் மருந்தகம் ஒன்றில் கருக்கலைப்பு மாத்திரைகள் வாங்கி கொடுத்துள்ளார்.

அடுத்த சில மணி நேரங்களில் அவருக்கு ஆண் சிசு உயிரிழந்த நிலையில் பிறந்துள்ளது. அந்த சிசுவை ஒரு சாக்கு பையினுல் சுற்றி வீட்டின் பின்புறம் புதைத்துள்ளனர்.

சிறுமிக்கு உதிரப்போக்கு நிற்காததால் வேறு வழி இல்லாமல் அரியலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர்

வைத்தியர்கள் பரிசோதித்த போது குறித்த சிறுமிக்கு கருக்கலைப்பு நடந்திருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் உடனடியாக குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

இதற்கமைய பொலிஸாரின் விசாரணைகளில், வீட்டின் பின்புறம் புதைத்த 7 மாத சிசுவின் உடலை கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில்தோண்டி எடுத்தனர்.

சிறுமியின் கர்ப்பத்திற்கு காரணமான அவரது தந்தை, கர்ப்பத்தை கலைக்க மாத்திரை வாங்கி கொடுத்த தாயார், வைத்தியர்களின் ஆலோசனை பெறாமல் கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்த மருந்தக உரிமையாளர் ஆகிய மூன்று பேரையும் கைது செய்துள்ளனர்.


## பிரபல பாடகி ரம்லா பேகம் காலமானார்

கேரள மாநிலத்தில் மாப்பிளப்பாட்டு பாடல்களால் ரசிகர்களின் மனதை கவர்ந்த பிரபல பாடகி ரம்லா பேகம் (வயது 86). வயது முதிர்வு காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் கோழிக்கோடு பரப்பட்டியில் உள்ள தனது இல்லத்தில் காலமானார்.

கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் 1946ஆம் ஆண்டு பிறந்த அவர், ரம்லா இந்தி பாடல்களை பாடியதன் மூலம் தனது இசை பயணத்தை சிறுவயதிலேயே தொடங்கினார்.

பின்பு ஆலப்புழாவில் உள்ள இசைக்குழுவில் இடம்பெற்றிருந்த அவர், ஏராளமான மலையாள இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றதன் மூலம் பிரபலமானார்.

கேரள மாநிலம்



மட்டுமின்றி வெளிநாடுகளுக்கும் சென்று இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரங்குகளில் கதாபிரசங்கம் கொடுத்த சாதனை ரம்லா பேகத்துக்கு உள்ளது.

தடைகளை மீறி பல கோவில்களிலும் இவர் பாடியிருக்கிறார். 500-க்கும் மேற்பட்ட கேசட்டுகள், 35-க்கும் மேற்பட்ட கிராமபோன் இசைத்தட்டுகளிலும் பாடியுள்ள அவர், பல விருதுகளையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓடும் காரில் சிறுமிக்கு பாலியல் தொல்லை

■ உத்தரப் பிரதேசம்

உத்தரப் பிரதேசம் மாநிலம் குஷிநகர் பகுதியில் 16 வயதான சிறுமியை அடையாளம் தெரியாத நபர்கள் 3 பேர் காரில் கடத்திச் சென்று பாலியல் தொல்லை கொடுத்துள்ளனர்

இது குறித்து சிறுமியின் பெற்றோர் கப்தங்கஞ்ச் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட சிறுமி, “நான் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்றபொழுது, ஒருவர் என்னைக் கத்தியைக் காட்டி மிரட்டி, அருகிலிருந்த குடிசைக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றார். பின்னர், அவருடன் இருக்கும் இரு



நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்து என்னைக் காரில் கடத்தினர். ஓடும் காரில் வைத்தே பாலியல் ரீதியாக மூவரும் துன்புறுத்தினர். தொடர்ந்து, மயக்க நிலையில் நான் வீட்டின் வெளியே வீசப்பட்டேன். என்று சிறுமி தெரிவித்துள்ளார்.



ஈ.எஃப்.எல் கிண்ணத் தொடர்

# வெளியேற்றப்பட்ட மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரிலிருந்து மன்செஸ்டர் சிற்றி வெளியேற்றப்பட்டுள்ளது.

நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான மூன்றாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து சிற்றி வெளியேற்றப்பட்டுள்ளது.

நியூகாசில் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸான்டர் இஸக் பெற்றார்.

மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## இந்தியாவை வீழ்த்திய அவுஸ்திரேலியா



இந்தியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 352/7 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 96 (84), ஸ்டீவன் ஸ்மித் 74 (61), மர்னுஸ் லபுஷைன் 72 (58), டேவிட் வோர்னர் 56 (34) ஓட்டங்கள்)

இந்தியா: 286/10 (49.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 81 (57), விராட் கோலி 56 (61), ஷ்ரேயாஸ் ஐயர் 48 (43), இரவீந்திர ஜடேஜா 35 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிளென் மக்ஸ்வெல்: 4/40, ஜொஷ் ஹேசில்வூட் 2/42, கமரொன் கிறீன் 1/30, தன்வீர் சங்கா 1/61)

போட்டியின் நாயகன்: கிளென் மக்ஸ்வெல்

தொடரின் நாயகன்: ஷுப்மன் கில்

மாஸ்டர்ஸ் தடகளப் போட்டியில்

## பிரகாசித்த புத்தளம் ஆசிரியர்களுக்கு வரவேற்பு



■ எம்.யூ.எம். சனூன்

சர்வதேச திறந்த மாஸ்டர்ஸ் தடகள போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்டு பதக்கங்களை வென்ற புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் உடற்கல்வி போதனாசிரியர்கள் இருவருக்குமான மகத்தான வரவேற்பு வைபவம் புத்தளம் நகரில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் புத்தளத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் பதக்கங்களை வென்றுள்ளனர். உயரம் பாய்தல் போட்டியில் ஆசிரியர் எம்.எம்.எம். ஹுமாயூன் தங்கப்பதக்கத்தையும், அவரது சகோதரர் ஆசிரியர் எம்.எப்.எம். துபைல் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று சாதனை நிலைநாட்டி இருந்தனர்.



சிறுவர் தடகள விளையாட்டுப் போட்டியில்

## சம்பியனான சாய்ந்தமருது அஷ்ரப் வித்தியாலயம்

■ நூருல் ஹுதா உமர்

சிறுவர் தடகள விளையாட்டு போட்டியில் கல்முனை வலய மட்டத்தில் தரம் மூன்று, நான்கு ஆகிய இரண்டு பிரிவுகளிலும் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கல்முனை லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது.

இதற்காக மாணவர்களை பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம். ஆபாக் ஆகியோரையும் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளையும் பாராட்டும் நிகழ்வு பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் மாலை அணிவித்து கௌரவித்தனர். கல்முனை வலயத்திற்குட்பட்ட ஐந்து கோட்டங்களில் இருந்து கலந்து கொண்ட பத்து பாடசாலைகளிலே இந்த பாடசாலை முதல் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கரப்பந்தாட்டத் தொடரில்

## வெற்றிவாகை சூடிய ஏ.பி.சி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

தேசிய மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு நடைபெற்ற கரப்பந்தாட்டத் தொடரில் ஏ.பி.சி விளையாட்டுக் கழகம் வெற்றிவாகை சூடியது.

வேப்பங்குளம் 4ஆம் கட்டை அல் ஹுதா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மன்னார்,வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 38 அணிகள் பங்கேற்ற நான்கு பேர் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் அல் ஹுதா பீ அணியை வென்றே ஏ.பி.சி சம்பியனானது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 29 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.